Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

ஒளி - 02 - கதிர் - 49 07.06.2001 வியாழக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/

சகல விதமான அச்சு வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

திருமலை வீதி, மட்டக்களப்பு.

## நோர்வேத் தூதுவர் சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வருகிறார்

(நமது சிறப்பு நிருபர்)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வரவிருப்பதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு நோர்வே அரசாங்கம் மேற்கொண்டு வந்த முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து சொல்ஹெய்ம் மீண்டும் கொழும்பு வருகிறார்.

இவர் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்,மற்றும் தமிழ் கட்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப்

(8ம் பக்கம் பார்க்க)

# வாகரை காட்டில் தேன் எடுக்க சென்ற மூவர் சுட்டுக் கொலை!

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்ட வாகரைப் பிரதேசத்திலுள்ள மதுரங்கேணிக்குளம் காட்டுப் பகுதியில் கடந்த மே மாதம் 22ம் திகதி தேன் சேகரிக்கச் சென்றபோது படையினரால் கைதுசெய்யப்பட்ட 3 கிராமவாசிகளும் சுட்டுக் கொல்லப்பட் டுள்ளனர் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் அவர்களது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.**

இவர்களைத் தாங்கள் கைது செய்யவில்லையென படையினர் சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மனித உரிமைகள் அலுவலகத்திற்கு தெரிவித்திருந்தனர். எனினும் வாழைச்சேனை பிரதேசத்திற்குப் பொறுப்பான 23-2 பிரிகேட்டைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவர் மேற்படி 3 கிராமவாசிகளும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவுக்குத் தகவல் தெரிவித் துள்ளார்

இவர்கள் எங்கு வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், இவர்களின் சடலங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை என ஐ.சி.ஆர்.சி வட்டாரங்கள் தெரிவித்தன.

### உறவினர்கள் கவலை!

இதனால் உறவினர்கள் பெரும் கலக்கமடைந்துள்ளனர். அன்றைய தினம் விறகு சேகரிக்கக் காட்டுக்குச் சென்ற யோகநாதன் கேசவராஜா (24வயது) என்பவர் அங்கு மறைந்திருந்த படையினரால் அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். தேன் சேகரிக்கச் சென்ற முருகன் மங்களேஸ்வரன் (24 வயது), இராமலிங்கம் சுப்பிரமணியம் (24 வயது), வேல்முருகு செல்வராஜா (20 வயது) ஆகியோர் படையினரால் கைது செய்யப்பட்டனர். இராணுவத்தினர் இந்த மூவரையும் அழைத்துச் சென்றதை உறவினர்கள் கண்டுள்ளனர். உறவினர்கள் இவர்களின் கைது தொடர்பாக மட்டக்களப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவிடம் புகார் செய்திருந்தனர். எனினும் கடந்த 3 வாரங்களாக இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியவில்லை. செவ்வாய்க்கிழமை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் படையினருடன் தொடர்பு கொண்ட போது இக கிராம வாசிகள் சுட்டு க்கொல்லப்பட்ட விடயம் தெரிய வந்துள்ளது.

### படையினரே சுட்டுக் கொன்றதாக மக்கள் தெரிவிப்பு!

இவர்களைக் கைது செய்து அழைத்துச் சென்ற படையினர் காட்டுக்குள் வைத்து சுட்டுக் கொன்று விட்டு சடலத்தை புதைத்திருக்க வேண்டுமென நம்பப்படுகின்றது. கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு-பொலனறுவை மாவட்ட எல்லைப் பகுதியில் அமைந்துள்ள வெலிக்கந்தை, கரடிக்குளம் போன்ற படை முகாம்களிலிருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தொலைவில் வாகரைப் பிரதேசத்திலுள்ள கட்டுமுறிவு, ஆண்டான்குளம், ஆலங்குளம், மதுரங்கேணிக்குளம் ஆகிய கிராமங்களுக்கு ஊடறுத்துச் செல்லும் படையினர், காடுகளில் மறைந்திருந்து தாக்குதல்களைநடத்துவது அதிகரித்துள்ளது.

### விசேட பயிற்சிப் பெற்ற படையினர் ஊடுருவல்!

இதனால் பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டும் காணாமல் போயும் உள்ளனர். நீண்ட தூரம் காடுகளுக்குள் சென்று மறைந்திருந்து தாக்குதல் நடத்தும் விசேட பயிற்சி பெற்ற படையினரே இவ்வகையான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடந்த திங்களன்று கஞ்சிகு

(8ம் பக்கம் பார்க்க)

## கோராவெளி சென்று திரும்பிய பக்தர்கள் மீது கடும் சோதனை

(நமது நிருபர்)

கோராவெளி கண்ணகை அம்மன் ஆலய திருக்குளிர்த்தில் உற்சவத்திற்கு சென்று திரும்பிய பொது மக்கள் கிரான் பால சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினர் கடுமையாக உடற் சோதனை மேற் கொண்டதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிரானையடுத்துள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் மேற்படி ஆலயம் அமைந்துள்ளது.யூன் 5ம் திகதி அங்கு சென்ற பொது மக்கள் நேற்று காலை குளிர்த்தில் வைபவம் முடிவடைந்து திரும்பி வந்த சமயம் இந்த சோதனை மேற் கொள்ளப்ப ட்டது.

## இன்று மட்டு நகரில் ராமகிருஷ்ண ஊர்திப் பேரணி

(அரியம்)

இன்று மட்டு நகர் விழாக் கோலம் காண்கிறது.இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தின் பவள விழாவின் இறுதி விழா இன்று காலை மட்டு நகர் ஆனைப்பந்தி மிஷன் வளாகத்தில் இருந்து ஆன்மீகப் பேரணி,வாகனங்களின் அலங்கார ஊர்தி பவனியும் இடம் பெறும். இவ் பேரணியில் பாடசாலை மாணவர்களின் கும்மி,கோலாட்டம்,கரகாட்டம்,காவடி ஆட்டம் என்பவற்றுடன் இனிய வாத்தியங்கள் முழங்க மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வீதியின் கிழக்கு முகமாய் புறப்பட்டு மத்திய வீதி, புளியந்தீவு, மணிக்கூட்டு கோபுரத்தடி, கோட்டைமுனை பாலம் வழியாக திருமலை வீதி ஆகியவற்றினூடாக அரசடிச் சந்தியை சென்றடைந்து புதிய கல்மு

(8ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை;

(வவுனியா நிருபர்)

வவுனியா மன்னார் வீதியில் உள்ள ஊர்மிளா கோட்டம் என்னுமிடத்தில் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களினால் இளைஞர் ஒருவர் நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில்,சுட்டுக் கொல்லப்பட்டுள் ளதாக பொலிசார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவராகிய தனது சகோதரனைக் கட்டிப்பிடித்து கொலையாளிகளிடமிருந்து காப்பாற்ற முயற்சி செய்த நாகராணி (30) என்ற பெண் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

(8ம் பக்கம் பார்க்க)

## விமானப்படை தளபதி மட்டக்களப்புக்கு விஜயம்

(நமது நிருபர்)

விமானப்படை தளபதி ஏயார்வை மாஷல் ஜயலத் வீரக்கொடி நேற்று மட்டக்களப்புக்கு விஜயமொன்றினை மேற் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விஷேட விமானப்படை ஹெலிஹெப்டர் மூலம் மட்டு நகர் வந்த இவர் மட்டக்களப்பு விமானப்படை அலுவலகத்தில் அதிகாரிகளை சந்தித்து பேச்சுக்கள் நடத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

வருடத்திற்கொரு முறை மேற் கொள்ளும் தளபதி விமானப் படையினரின் நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்ததாகவும் கூறப்படுகிறது.

## மேலும் ஒரு சிப்பாய் மரணம்

(நமது நிருபர்)

காவத்தைமுனை சம்பவத்தில் காயமடைந்து பொலனறுவை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த மற்றுமொரு இராணுவச் சிப்பாய் நேற்று உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே ஆறு படையினர் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏற்றமிகு ஆற்றல்

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சமாதானம் காண்போம்

ஜனாதிபதி சந்திரிகா



இல்லையெண்டா அவமானம் தான் காண்பியல்............

**உடனடி வேலைவாய்ப்பு**

1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்படும்)

1. டோகா கட்டார் இலும் உடனடி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)

- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM INSTALLER,
- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM FITTER.
- TILE PIXER,
- MASON,
- CARPENTER,
- PAINTER,
- ELECTRICIAN,
- ELECTRONIC TECHNICIAN

போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.

உடனடிப் பயணம்

நியூ பாஹிம் என்டப்பிரைஸஸ்

LL No -736

283/1 பிரதான வீதி, கொழும்பு.

*விசாரணைகளுக்கு:*

இல:15/1, 15/2, பிரதான வீதி,

காத்தான்குடி -02

065-47090 ADVT.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155,திருமலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே.065.22554


## பவள விழா!

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண தேவரின் திருவருள் நோக்கால், அம் மகானது முதல் சீடராகிய வீரமிகு துறவி ஸ்ரீமத் விவேகானந்த அடிகளாரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் இயக்கம் உலகளாவிய ரீதியில் தனது ஆச்சிரமங்களை நிறுவி, 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற தனது உன்னத குறிக்கோளை நிறைவேற்றி வருகிறது.

சுவாமி விவேகானந்தரின் கொழும்பு வருகையோடு இலங்கையில் தலை நகரிலே நிறுவப்பட்ட இராம கிருஷ்ண மிஷன் காலப்போக்கில் கொழும்புக்கு வெளியே அதன் கிளைகளைப் பரப்பியது. யாழ்ப்பாணத்திலும் வித்தகர் விபுலானந்த அடிகளாரால் மிஷன் கிளை அமைக்கப்பட்டு சேவையை விஸ்தரித்தது.

ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அந்நியர் ஆட்சிக்காலத்தில் சைவ மதத்துக்கு ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளையும் நிஷ்டூரங்களையும் ஆத்மிக சிங்கம் எனக் கர்ஜித்து ஏற்படுத்திய சைவாகமப் புரட்சியால் யாழ்பாணத் திருவிடம் சைவாகமத்திலேயே ஊறித் திழைத்திருந்தது. அதனால் அப்போதைய யாழ்ப்பாணச் சமூக நிலவரத்தில் சர்வ மதக் கருத்துக்களை அனுசரித்து இயங்கிய ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பணிகளை ஆங்கு தொடங்குவதற்கு சந்தர்ப்ப சூழ்நிலை பெரிதும் வாய்க்கவில்லை என்று முன்பு பேசப்பட்டது.

சுவாமி விபுலானந்தர் பின்னர் தமது தாயக மாநிலமான மட்டக்களப்பு என்னும் மாநாட்டுக்கு மிஷன் பணிகளை நகர்த்தினார்.

இன்று பவள விழாக்காணும் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு குருகுல மாணவர் இல்லம் இந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது.

இம் மாணவரில்லத்தின் பணிகளையும் பயன்பாடுகளையும் 'தினக்கதிரில்' நேற்றும் இன்றும் வெளிவந்திருக்கும் இராமகிருஷ்ண சங்கத் துறவிகள், மற்றும் மதப் பெரியார்கள், அறிஞர் பெருமக்களின் ஆசிச் செய்திகள், வாழ்த்துக்கள், ஆய்வுக் கட்டுரைகள் மூலம் வாசக அன்பர்களுக்கு சான்று படுத்தப்பட்டிருக்கின்றன.

கல்லடி - உப்போடையில் வைத்து ஏழை, அநாதை சிறுவ, சிறுமிகளை வளர்த்து ஆளாக்கி உலகின் நாலா புறங்ளிலும் அவர்கள் பிரகாசிக்கச் செய்யும் இம் மாணவர் இல்லத்தின் ஸ்தாபகர் சுவாமி விபுலானந்தர் முதல் இன்றைய பவள விழா நாயகர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த மகராஜ் வரையான சங்கத் துறவிகள், ஆச்சிரமத் தொண்டர்கள் மற்றும், இம் மாணவர் இல்லம் தட்டுமுட்டின்றி திறம்பட இயங்க உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருக்கும் அனைத்துப் புண்ணியவான்களுக்கும் இந்த இனிய நன்நாளில் சிரந்தாழ்த்தி நன்றி பாராட்டுவோம்.

## காயத்திரி மகாயாகம்

மட்டக்களப்பு நாவலடி வீதியில் கடலோரம் அமைந்துள்ள புது முகத்துவாரத்தில் ஸ்ரீ காயத்திரி பீடமும், சப்தரிஷிகள் மண்டலாலயமும் அமையப் பெற்று சமீப வருடங்களாக ஆத்மீகப் பணிகள் சிறந்து வருகின்றன. காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகள் சப்தரிஷி களின் திருவருள் பாலிப்போடு மட்டக்களப்பு மக்களை ஸ்ரீ காயத்திரி மகா மந்திர உபாசனையில் ஆழ்த்தி ஆத்மீக நெறிகாட்டி வருகிறார்.

உலகத்திலேயே முதன் முதலாக இங்குதான் சப்தரிஷிகளுக்கு மண்டலாலயம் நிறுவப்பட்டு பூர்த்தியடைந்து வருவது ஸ்ரீ காயத்திரி அடியார்களுக்கும் இந்துக்களுக்கும் ஆத்மீகப் பேருவகை தருவதாகும்.

"மாதங்களில் நான் மார்கழி மலர்களிலே மல்லிகை மந்திரங்களில் காயத்திரி" என்று கிருஷ்ண பகவான் திருவாய் மலர்ந்தமைக்கு இணங்க, அதி சக்தி வாய்ந்த ஸ்ரீ காயத்திரி மந்திரம் மூலம் மகா மகரிஷிகளையும், சித்தர்களையும் முன்னிறுத்தி ஸ்ரீ காயத்ரி மகா யாகங்களை முருகேசு சுவாமிகள் நடத்தி வருகிறார்.

நாடும் நாட்டு மக்களும் நாட்டரசுகளும் இயற்கை மற்றும் அரசியல் சோதனைகளுக்கு இலக்காகி இன்னலுறும் போதெல்லாம் காலங்களுக்குக் காலம் யாகங்கள் செய்து நிவர்த்தி பெறுவது கீழைத்தேய மத மரபுகளாகும்.

அவ்வகையில் இன்று நடந்தேறும் காயத்ரி மகாயாகம் இந்த நாட்டின் இனப் பிரச்சினைகளையும் அதனாலான யுத்த பீதிகளையும் தீர்த்து நாட்டில் சமாதானமும் வளமும் சுரக்கப் பிரார்த்திப்போம்.

# வண்ணக்கர் பண்ணையில் முளைவிட்டு கிழக்கில் நிழல் பரப்பும் குருகுலம்

ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என அதன் ஸ்தாபகர் வீரத் துறவி விவேகானந்த அடிகளாரின் இலட்சிய வேட்கையோடு பெரும் அர்ப்பணிப்புக்களுடன் உலகளாவிய அளவில் பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே! இப்பணிகளில் உயிரான அம்சமாக மாணவர் குருகுலம் தோற்றுவிக்கப்பட்டது. திக்கற்ற அநாதைச் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் உண்டியும், உடையும், உறையுளும் கூடவே உணர் கல்வியும்

**காசுபதி நடராசா**

கொடுத்து, அந்த இளஞ் சந்ததியின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு கலங்கரை விளக்காக இவ்வில்லத்தால் வழிகாட்டப்படுவது போற்றத்தக்கதே!

இவ் வகையில், ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் முதலாவது ஈழத்துத் துறவியும், கிழக்கின் விடிவெள்ளியுமாகிய முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரால் வடக்கே வண்ணார் பண்ணையில் 1926 ஜுன்6ல் தோற்றுவிக்கப்பட்டுப் பின்னர் கிழக்கே கல்லடி உப்போடையில் 1929-11-26ல் நிலை நிறுத்தப்பட்ட மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம் தனது 15 வருட கால நீண்ட நெடுஞ்சேவைகளை விஸ்தரித்து இன்று பவள விழாக் கொண்டாட்டத்தில் பூரித்து நிற்கின்றது!

மட்டக்களப்பு நகரில்




யாழ்ப்பாணம் வண்ணை வெள்ளிக்கிழமை மடத்தில் சுவாமி விபுலானந்தரினால் தொடக்கப்பட்ட ஆறு மாணவர்கொண்ட குருகுல மாணவர்களில், இன்றும் எம் மத்தியில் இறை பணியும் இசைப்பணியும் புரிந்துவரும் பண்ணிசை வேந்தர் அருட்கலைத் திலகம் மட்டுநகர் ஆர்.குழந்தைவேல் ஐயா அவர்களையே படத்தில் காண்கிறீர்கள்.

மாத்திரமல்ல, மருத நிலக் கிராமிய சூழலமைந்த காரைதீவு வரை மாணவர் இல்ல நேரடிச்சேவை வியாபித்திருக்கிறது. காரைதீவு சிறுமியர் இல்லம் எடுத்துக் காட்டாகச் செயல்படுகின்றது. அந்தக் 'காரேறு மூதூர்' நம் விபுலானந்தர் அவதரித்த புண்ணிய பூமி என்பது அறிந்ததே!

ஆத்மிக வளர்ப்பு வாய்ந்த இளைஞர்களும் யுவதிகளும் நாடெங்கும், கடல் கடந்த நாடுகளிலும் வியாபித்து உன்னத நிலையில் பிரகாசித்ததையும், இப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருப்பதையும் அறியலாம்.

அவர்களில் முஸ்லிம் மாணவர்களும் மலையக மற்றும் கிறிஸ்தவ மாணவர்களும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. 'எம் மதமும் சம்மதமே' என்னும் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் சர்வ



இன்று பவள விழாக்காணும் மட்டக்களப்பு ஸ்ரீ இராம கிருஷ்ணபுரம் மாணவர் குருகுல இல்லத்தின் முகப்புத் தோற்றம்.

## இராம கிருஷ்ண மிஷனே வளர்க!

மட்டக்களப்பும் மதிப்புறு வகையில்
வளர்ச்சி கொண்டது இம்மிஷ னாலும்
திட்ட மிட்டே செயல்பல செய்கிறார்
சீவானந்தா முதலானோரே
விட்டுப் போகா வேதனை வறுமை
விரட்டி யோட்டும் மிசனது சேவை
பட்டி தொட்டி பரவி எங்கும்
பாரெலாம் சேவை கூட்டு கின்றதே.
சமயம் என்பது சமூகத் தொண்டாய்
சாற்றச் செய்யும் தருமச் செயல்கள்
இமையம் போன்றே எழுச்சி கொண்டு
இராமக் கிருஷ்ண மிசனே தன்னால்
அமைதி காண அவனி யிதிலே
ஆத்மா வையே ஆண்டவனாக
உமையோ டீசன் உளத்தே என்று
உரைத்த துணர்ந்து உயர்வோம் நாமே.
இளமைத் திறமை விவேகானந்தர்
இராமக் கிருஷ்ணர் உறவில் உயர்ந்து
பழைமை தொட்டே பரவி வந்த
பகுத்தறிவு வில்லலாச் செயலை உணர்ந்தார்
களத்தே உணர்த்திய பகவத் கீதை
காட்டும் சமய வுட்பொருள் தெளிந்து
உளத்தே ஆத்மா ஒளிமிகு சமயம்
ஒரு நூற் றாண்டாய் உலகே அறியும்
மூடக் கொள்கை கூடிய செயலை
முன்னுள் ளோர்கள் செய்தே வந்தாலும்
கூடிக் கூடி வளரா திப்போ
குறைநீது வருதல் காண்கின்றோமே.
ஓடச் செய்வோம் ஒருசிலர் செயலை
உயிர்கள் வருந்த உயர்கோ புரமேன்
வேடம் போட்டு உழைப்போர்களையும்
மேலோன் இறைவன் உளத்திருந்தறிவான்

**கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி**

மதக் கொள்கைக்கும் இலட்சியங்களுக்கும் இது எடுத்துக்காட்டாகும்.

ஒரு நேரச் சோற்றுக்கும், உடுத்த உடைக்கு மாற்றுடைக்கும், உறங்குவதற்குக்கூட ஒதுக்கிடம் கிட்டாமலும் பச்சிளம் பாலகர்கள் பரிதவித்துத் திரியும் இன்றைய வன்முறை யுகத்திலே மட்டக்களப்புக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் குருகுல மாணவர் இல்லம் வாய்க்கப் பெற்றதும், அதன் பெரிய தர்ம காரியங்கள் கடந்த 75 ஆண்டுகளாக தங்கு தடையின்றி செவ்வனே நடைபெற்றுவருவதும் குருதேவரின் திருவருளாலாகும்.

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட இம் மாணவர் இல்லம் இன்று அன்னாரின் சீடர்களில் ஒருவராகிய ஸ்ரீமத் சுமாமி ஜீவனாநந்த ஜீ மகராஜ் அவர்களின் தலைமைப் பணியில் பவள விழாக் காண்பது ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் அடியார்களையும் ஆதரவாளர்களையும் குதூகலிக்க வைக்கின்றது.

மாணவர் இல்லம் மூலம் புண்ணிய கருமங்களை நிறைவேற்றி அமரத்துவம் எய்திய ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் துறவிகள் மற் றும் தொண்டர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தும் இப்பவள விழாநாளில் அப்பணிகளை பல்வேறு சிரமங்களுக்கும், சிக்கல்களுக்கும் மத்தியில் தொடரும் ஸ்ரீமத் சுவாமி ஜீவனாநந்த ஜீ மகராஜ், இலங்கைக் கிளைத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணாநந்த ஜீ மகராஜ், உறுதுணையாகச் செயலாற்றும் அகராத்மானந்த ஜீ மகராஜ், ஸ்ரீமத் சுவாமி தத்பாஸானந்த ஜீ மகராஜ் மற்றும் தொண்டர்களான பத்மநாதன், இராஜகோபால், சிவயோகம் முதலானோரையும் நன்றிப் பெருக்குடன் வாழ்த்துவோமாக!

# வடக்கு கிழக்கில் 1990 காலப்பகுதியில் வன்முறைகளை விசாரிக்க ஆணைக்குழு அமைக்க வேண்டும்!

## ஜனாதிபதியிடம் அ.ஊ.சங்கம் கோரிக்கை

(காரைதீவு நிருபர்)

வடக்கு கிழக்கில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம் பெற்ற வன்முறைகளை விசாரிக்க தனியான ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்கவைக் கேட்டுக்கொள்ளவுள்ளது.

இச் சங்கத்தின் மத்திய நிறைவேற்றுக் குழுக்கூட்டம் கல்முனை உவெஸ்லிக் கல்லூரியில் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெற்ற போது இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தலைவர் எஸ்.லோகநாதன் பேசுகையில்:-

"கொடிய யுத்தத்திற்கு முகங்கொடுக்க அரசாங்கம் கஷ்டப் படுகிறது. யுத்தச் செலவீனங்கள் வானை முட்டுமளவிற்கு உயர்ந்து செல்கிறது.

இதனால் அரச ஊழியர்க ளுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வு தாமதப்படுத்தப் படுகிறது. இதனால் ஊழியர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப் பட்டுள்ளனர். குறிப்பாக சிற்றூழி யர்கள் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்க்கையைக் கடத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே அரசாங்கம் உட னடியாக அரச ஊழியர்களுக்கு 2000 ரூபாயை மேலதிக கொடுப்ப னவாக வழங்க வேண்டும் இல்லா விடில் அதே ஊழியர்கள் விரக்தி யின் விளிம்பிற்குத் தள்ளப்ப டுவார்கள் என்று குறிப்பிட்டார்.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

**அம்பாறை தேர்தல் மாவட்டமாக வேண்டும்.**

◆ முன்னைய அரசினால் கொண்டு வரப்பட்ட திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் என்ற பெயரை அம்பாறை தேர்தல் மாவட்டம் என மாற்றம் செய்தல் வேண்டும்.

◆ அம்பாறை மாவட்ட கச்சேரியில் தமிழ்பேசும் இரண்டு மேலதிக அரச அதிபர்கள் நியமிக்கப்பட வேண்டும்.


◆ இறக்காமம், நாவிதன்வெளி, சாய்ந்தமருது ஆகிய புதிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு தனியான கல்வி அலுவலகங்கள் ஏற்படுத் தப்பட வேண்டும்.

◆ வடக்கு கிழக்கு மாகாண சபையில் இன விகிதாசார விகிதத் தில் நிருவாகிகள் நியமிக்கப்படல் வேண்டும்.

◆ தொழிற்சங்கச் சந்திப்புகள் தமிழில் அமைய மத்திய, மாகாண அரசுகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

# சமாதானம் வேண்டி இன்று மட்டக்களப்பில் மகாயாகம்!

(அரியம்)



மட்டக்களப்பு - நாவலடியைச் சேர்ந்த புதுமுகத்துவாரம் கடலோரம் அமைந்துள்ள சப்தரிஷி மண்டலத்தில் நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டி இன்று (வியாழன்) காலை 9 மணி தொடக்கம் ஸ்ரீ காயத்ரி மகாயாகம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நுவரெலியா ஸ்ரீ காயத்ரி பீடாதிபதி கலாநிதி ஆர்.கே. முருகேச சுவாமிகள் இம் மகாயாகத்தை தலைமை தாங்கி நிறைவேற்றுவார்.

இந்தியாவிலுள்ள பவானி ஆச்சிரமத்திலிருந்து சப்தரிஷி மண்டலத்துக்காக போகர் மகரிஷி, ஈஸ்வரப்பட்டர் மகரிஷி, காலாங்கி நாத சித்தர் ஆகியோரின் ஜீவசமாதியில் பெறப்பட்ட புனித மண் தாங்கிய பேழையும் மகா யாகத்துக்கான உயிர் மூலிகைகளும் பவானி ஆச்சிரமச் சீடர்களான அன்னை ராஜம்பாள், ஸ்ரீ மதிவாணன் முதலானோரால் நேற்று மட்டுநகருக்கு எடுத்து வரப்பட்டிருக்கிறது.

புதுமுகத்துவாரம் சப்தரிஷி மண்டலத்தில் பிரதிஷ்டை செய்வ தற்காக சப்தரிஷிகளைக் குறித்து விசேடமாக உருவாக்கப் பட்ட ஏழு ஆன்மீக 'மணி' களும் பவானி ஆச்சிரம சீடர்களால் கொண்டு வரப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு - தாமரைக் கேணி ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயத் தில் நேற்று மாலை வழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருந்த இப்புனித பொருட்கள் இன்று (வியாழக் கிழமை) காலை 9 மணிக்கு புதுமுகத்துவாரம் சப்தரிஷி மண்டப வளாக நாவலடி வீதியில் வரவேற்கப்பட்டு பக்திப் பவனியாக யாகசாலைக்கு கொண்டு செல்லப்படும்.

தொடர்ந்து நடைபெறும் மகாயாக நிகழ்வின் போது ஸ்ரீமத் சுவாமி முருகேசு அவர்கள் "சப்தரிஷிகளின் மர்மவாசம்" என்னும் தலைப்பில் அருளுரை நிகழ்த்துவார். பவானி ஆச்சிரம வாசிகளான அன்னை ராஜம்பாள் ஸ்ரீ மதி வாணன் ஆகியோரும் அங்கு ஆன்மீக விளக்கவுரை நிகழ்த்து வார்கள்.

மகாயாக நிறைவில் யாக குண்டலத்திலிருந்து பெறப் படும் புனித விபூதிப் பிரசாதம் மூலம் காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகள் யாகத்தில் பங்குகொள்ளும் அடியார் களை ஆசீர்வதிப்பார்.

தொடர்ந்து அங்கு அன்ன தானம் நடைபெறும்.

இம் மகாயாகத்தில் பங்கு கொள்ளும் அடியார்களின் போக்கு வரத்து வசதிக்காக இன்று காலை 7 மணி முதல் மட்டக்களப்பு நகரிலிருந்து அரசடிச்சந்தி ஊடாக நாவலடி மார்க்கத்தில் விசேட பஸ் போக்குவரத்து சேவை ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

# நாட்டின் பொருளாதாரத்தை வெளிநாட்டுக்கு விற்க நடவடிக்கை

(கொழும்பு)

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியத்துக்கு ஏற்ப நாட்டின் பொருளாதாரத்தை வெளிநாட்டு நிறுவனங்கள் வசம் ஒப்படைக்க அரசாங்கம் நடவ டிக்கை மேற்கொள்வதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் வீரவன்ச நாடாளு மன்றத்தில் தெரிவித்தார்.

சபாநாயகரின் விசேட அனுமதிபெற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை விற்பனை செய் வதற்கு ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். இது தொடர்பான உண்மை நிலை பற்றி நாடாளு மன்றமும் மக்களும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளதால் இது தொடர்பான நாடாளுமன்ற விவாதம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் வீரவம்ச கேட்டுக் கொண் டார்.

# காரைதீவில் மகளிருக்கான விசேட பயிற்சித் திட்டம்

(காரைதீவு நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணை யுடன் காரைதீவில் மகளிருக்கென விசேட செயற்திட்டமொன்று ஆரம் பிக்கப்படவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் மகளிருக்கான ஐசிங், பெயின்ரிங், கொண்டை அலங்காரம் போன்ற விடயங்களில் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.விஜயரெத்தினம் தெரிவித்தார்.

மாகாண சபையிலிருந்து போதனாசிரியை திருமதி.பவானி இதற்கென விசேடமாக நியமிக்கப் பட்டுள்ளார். இங்கு 30 யுவதி களுக்கே சந்தர்ப்பம் வழங்கப்ப டவுள்ளது.

மேலும் 30 பேருக்கு தலைமைத்துவப் பயிற்சி வகுப் பொன்றும் நடாத்தப்படவுள்ளதாக விஜயரெத்தினம் தெரிவித்தார்.


ஒட்டு மாமரம் உங்களுக்குத் தேவையா?

நாடவேண்டிய இடம் :-
மன்ற, இல.19, சரவண வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே - 22500


# அகில உலக ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் சுவாமிக்கு கல்லடியில் அமோக வரவேற்பு

(அரியம்)

எந்தக் குறிக்கோளுக் காக இராமகிருஷ்ண மாணவரில்லம் ஆரம் பிக்கப்பட்டதோ அந்தக் குறிக் கோளை அடைவதையிட்டு மகிழ்ச்சி யடைகிறேன் என அகில உலக இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி சிவமயானந் தாஜி மகராஜ் அவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு கல்லடி மணிக் கூட்டுக் கோபுரத்தில் இருந்து இடம் பெற்றது.

இவ்வரவேற்பு உபசாரத் தில் ஏற்புரையாற்றிய போதே சுவாமி சிவமயானந்தாஜி மகராஜ் இவ்வாறு தெரிவித்தார். இராமகிரு ஷ்ணமிஷன் குருகுல பழைய மாணவர் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் தொடர்ந்து பேசுகையில் எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பினை மனதார ஏற்றுக்கொள்கின்றேன். இம் மக்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டுள்ளமையை பாராட்டுகி ன்றேன். சாதுக்களின் அன்பான இடைவிடாத அர்ப்பணிப்பினால் அன்று அவர்கள் கண்ட கனவு இன்று நனவாகிறது எனவும் கூறினார்.

கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் இருந்து இராமகி ருஷ்ணமிஷன் மண்டபம் வரையும் வீதிகள் அலங்கரிக்கப்பட்டும் வீதித் தோரணங்கள் இடப்பட்டதுடன் வீதியின் இருமருங்கிலும் நிறைகு டங்கள் வைத்து மக்கள் சுவாமியை வழிபட்டு ஆசிர்வாதம் பெற்றனர். மங்கள வாத்தியம் முழங்க சுவாமி சிவமயானந்தஜி மகராஜ் நடைப வனியாக பல நூற்றுக்கணக்கான பொது மக்களுடன் அழைத்துச் செல் லப்பட்டு இராமகிருஷ்ண மண்ட பத்தின் விசேட பூசை ஆராத னைகளைத் தொடர்ந்து அங்கு குழு மியிருந்தவர்களை ஆசிர்வதித்து உரை நிகழ்த்தினர்.

# குருந்தையடியில் கடல் மண் அகழ்வு!

(காரைதீவு நிருபர்)

கல்முனை, குருந்தையடி பகுதியில் கடல் மண் அகழ்வு வேலைகள் மிகவும் தீவிரமாக இடம் பெற்று வருவதாக பிரதேச வாசிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

சட்ட விரோதமான இக்கடல் மண் அகழ்வதால் குருந் தையடி கிராமமே கடலால் காள் கோளிடப்படும் அபாயம் ஏற்பட் டுள்ளது.

கரையோரப் பிரதேசத்தில், இங்கு மட்டுமே மண் அகழ்வு இடம் பெறுகிறது. சம்பந்தப்பட்ட அதிகா ரிகளிடம் பலமுறை தெரிவித்திருந்த போதிலும் எந்த வித நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை என பிரதேச வாசிகள் குற்றம் சாட்டுகின் றனர்.

# நொராட் திட்டத்தின் அதிகாரிகள் இடைநிறுத்தம்

(அரியம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக நல தயாரிப்புத் திட்டத்தில் அதிகாரிகள் தரத்தில் கடமை யாற்றிய 17 பேரை நிதித் திட் டமிடல் அமைச்சின் செயலா ளரினால் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. வழமையாக உத்தி யோகத்தரை வேலையில் இருந்து நிறுத்தும் போது குறைந்தது ஒரு மாதத்துக்கு முன் அறிவித்தல் கொடுக்கப்படும். ஆனால் இரண்டு நாள் முன்னறிவித் தலுடன்இந்த அதிகாரிகள் பதினேழு பேரும் வேலையில் இருந்து இடை நிறுத்தி யுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த 1990 ம் ஆண்டு நோர்வேயின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 1997ல் மட்டக்களப்பு மாவட்ட ஒன்றிணை க்கப்பட்ட புனரமைப்புத் திட்டமாக செயல்பட்டு 1998ல் டேபா திட்டம் என்ற பெயரில் செயல்பட்டது.

இத்திட்டத்தில் "கடமை யாற்றிய ஏனைய சுமார் 140 சமூக சேவையாளர்கள் தொடர்ந்தும் பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

இவர்களுக்கான மாத வேதனம் இரண்டாயிரம் மட்டுமே. இதுவரை மாத மொன்றுக்கு 3 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை "நொராட்" இத் திட்டத்திற்காக ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விசாரணை அறிக்கை வந்ததும் மக்களுக்கு விபரம் வெளியாகும்

## -நேபாள மன்னர் அறிவிப்பு-

(காத்மாண்டு)

**நே**பாளத்தில் நடைபெற்ற அரச குடும்பத்தினரின் படுகொலை தொடர்பான விசாரணைகளை உயர்மட்டக்குழு ஒன்று நடத்திவருவதாகவும் இன்னும் மூன்று நாட்களுக்குள் இது முடிந்துவிடும் என்றும் புதிய மன்னர் கயநேந்திரா தெரிவித்துள்ளார்.

மூன்று நாட்களுக்குள் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு இந்த குழுவிடம் கேட்கப்பட்டுள்ளதாவும், அவ்வாறு அறிக்கை கிடைத்தவுடன் அதன் விபரங்கள் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படும் என்றும் கயநேந்திரா கூறினார்.

முன்னதாக அரச குடும்பத்தினரின் படுகொலை தொடர்பாக உரிய விளக்கம் அளிக்கப்படாத நிலையில் கோபாவேசம் கொண்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியதை அடுத்து தலைநகர் காத்மாண்டுவில் அரசாங்கம் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்திருந்தது.

கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளால் நேபாளத்தின் தலைநகரில் ஒருவித அமைதி நிலவுகின்ற போதிலும் மக்கள் மத்தியில் புதிய மன்னர் மீதான அதிருப்தி நீங்கவில்லை. நகரில் மாமூல் வாழ்க்கை இயல்பாகத் திரும்பவில்லை. புறநகர்களிலும் கிராமங்களிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அரச உடமைகளுக்குச் சேதம் ஏற்படுத்தும் சம்பவங்களும் நேற்று நடந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னரும் அவர் குடும்பத்தினரும் படுகொலை செய்யப்பட்டதற்குப் பின்னணியில் எந்த சக்திகள் இயங்கியிருக்கின்றன என்பது பற்றியே மக்கள் பேசிக் கொள்வதைக் காணக்கூடியதாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.




நேபாள மன்னர் குடும்பம் படுகொலை செய்யப்பட்ட அரண்மனைக்கு முன்பாக உள்ள வீதிகளில் பாதுகாப்புக் கடமையிலீடுபட்டுள்ள நேபாள இராணுவத்தினர்

## “தனி அமைப்பு உரிமை கோர முடியாது”

(ஸ்ரீநகர்)

**கா**ஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாகப் பேசுவதற்கு தாங்கள் மட்டுமே தகுதியுடையவர்களென்றும் தாங்களே காஷ்மீர் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவதாகவும் ஹுரியத்மா நாட்டுக் கட்சியினர் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்று காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக பேச்சு நடத்த இந்திய அரசினால் நியமிக்கப்பட்டுள்ள கே.ஸி.பந்த் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு தனி ஒரு அமைப்பு உரிமை கோர முடியாதென்றும் பந்த் சொன்னார்.

## மகனைக் கட்டுப்படுத்த வேண்டிய மன்னர்

(காத்மண்டு)

**நே**பாளத்தின் புதிய மன்னராகப் பதவியேற்ற கயனேந்திரா எதையும் தீர்க்கமாக முடிவெடுத்து முடியாட்சியைக் காப்பாற்றும் திறமையுள்ளவராக இருந்தாலும் பெரும்பாலும் கெட்ட பெயரைச் சம்பாதித்துள்ள இன்றைய முடிக்குரிய இளவரசனான மகன் பராஸைக் கட்டுப்படுத்தித் திருத்திக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது மன்னருக்கு இன்று முக்கியத்துவமாகவுள்ளது.

அரண்மனைச் சூட்டுச் சம்பவத்தில் முடிக்குரிய இளவரசராக உள்ள பராசும் அவரது தாயார் மகாராணி கோமலும் காயமடைந்த போதிலும் ஆபத்தான நிலை எதுவும் ஏற்படவில்லையென்று அறிவிக்கப்படுகிறது.

இளவரசர் பராஸ் அடிக்கடி பெற்றோருடன் சண்டை போடுவாரென்றும் வீட்டுச் சாமான்களை அடித்து நொருக்குவாரென்றும் அவரைத் தெரிந்த மக்கள் கூறுகின்றார்கள்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## இந்தியா - பாக் பேச்சுக்கு முஜாகிதீன் வரவேற்பு

(ஸ்ரீநகர்)

**கா**ஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியாவும் பாகிஸ்தானும் இருதரப்புப் பேச்சு வார்த்தை நடாத்தத் தீர்மானித்திருப்பதை காஷ்மீரின் முன்னணி பிரிவினைவாத இயக்கமான ஹிஸ்புல் முஜாகிதீன் வரவேற்றுள்ளது.

கடந்த 53 ஆண்டுகளாக பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கும் காஷ்மீர் பிரச்சினைகள் தொடர்பாக இந்திய பாகிஸ்தானியத் தலைவர்கள் உட்கார்ந்து பேசுவது மிகவும் முன்னேற்றகரமானது என்று ஹிஸ்புல் முஜாகிதீனின் இயக்கத்தின் அதிவுயர் தலைவர் ஸைப்ஸிலாகுதீன் சீ.என்.என்.செய்தித்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

## நேபாளம் செல்வதைத் தவிர்க்க அமெரிக்க குடி மக்களுக்கு யோசனை

(வாஷிங்டன்)

**அ**மெரிக்கப் பிரஜைகள் நேபாளத்துக்கு சுற்றுலா செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும் தற்போது நேபாளத்திலுள்ள அமெரிக்கர்களை வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறும் அமெரிக்க ராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது.

நேபாளத்தில் நடைபெற்ற அரச குடும்பத்தினரின் படுகொலைக்கு விளக்கம் கோரி அரச மாளிகைக்கு கோபாவேசத்துடன் திரண்டுவந்த கூட்டத்தை அடக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வெடிக்க வைத்ததுடன் குண்டாந்தடிப் பிரயோகத்தையும் மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை தலைநகர் காத்மாண்டுவில் பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தின் போது விமான நிலையத்தில் இருந்த 26 சுற்றுலாப் பயணிகளை அங்குள்ள பிரிட்டிஷ் தூதரகம் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 23 பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகளும் கனடியர் இருவரும் வங்காளி ஒருவரும் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்ததினால் நிர்க்கதிக்கு உள்ளானதாகவும் நான்கு வாகனங்களில் இவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

## உளவு பார்த்ததாக சிறையில் இருந்தவர்கள் நஷ்டஈடு கேட்கின்றனர்

(வாஷிங்டன்)

**ஐ**க்கிய அமெரிக்காவுக்காக உளவு பார்த்தார்கள் என்று சந்தேகத்தின் பேரில் கடந்த எட்டு வருடங்களாக லிபியாவில் சிறைத்தண்டனை அனுபவித்த எட்டு எத்தியோப்பியர்களும் லிபிய அதிகாரிகள் தம்மை சித்திரவதைப் படுத்தினர் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் தமக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளனர். ஏழு ஆண்களும் பெண் ஒருவருமாக எட்டுப்பேர் லிபியாவில் தடுத்து வைக்கப்பட்டு கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்டனர்.

அமெரிக்க மத்திய உளவு பிரிவுக்காக பணிபுரியும் கறுப்பு யூதர்கள் என தம்மீது குற்றம் சுமத்தப்பட்டதாகவும் அத்துடன் மின்சாரம் பாய்ச்சியும் கட்டையால் அடித்தும் சித்திரவதைப் படுத்தப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

இதேவேளை குறித்த எட்டுப்பேரும் லிபியாவுக்கு வேலை தேடிச் சென்றதாகவும் இறுதியில் தாம் சிறைத்தண்டனை அனுபவித்ததாகவும் கூறினர்.

மேலும் இந்த எட்டுப்பேர் மீதும் உத்தியோகபூர்வமாக எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிங்களப் பாடசாலையைப் பயன்படுத்த யோசனை

(காத்தான்குடி நிருபர்)

**க**டந்த 18 வருடங்களுக்கு மேலாக இயங்காது பாழடைந்து வரும் மட்டக்களப்பு சிங்கள மகா வித்தியாலயத்தில் மேலதிக மாகாண கல்விப் பணிமனையை அமைக்க முடியுமென மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்திலேயே மேலதிக மாகாண கல்விப் பணிமனையும் இயங்குகின்றது. இதனால் இட நெருக்கடி நிலவுகிறது.

இவ் அலுவலகத்தை மூடப்பட்டுள்ள சிங்கள மகா வித்தியாலயத்தில் அமைத்தால் மாவட்டத்திற்குமான புத்தகக் களஞ்சியப் பதிவேட்டு அறை முதலியவற்றை இங்கு அமைக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## காப்புறுதிக் கம்பனிகளை ஏமாற்ற முயன்ற பொலிசார் மீது வழக்கு

(இஸ்தான்புல்)

**து**ருக்கியில் காப்புறுதி கம்பனிகளை ஏமாற்ற முயற்சித்த 22 பொலிஸாரை கைது செய்யுமாறு துருக்கி நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது. காப்புறுதி கம்பனி ஒன்றை ஏமாற்ற முயற்சித்தமை தொடர்பாக பொலிஸார் உட்பட 41 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெருக்கடியின் போது வாகனங்கள் விபத்துக்குள்ளானதாக போலி ஆவணங்களை காப்புறுதி கம்பனிகளுக்கு ஒப்படைத்து பணம் பெற முயற்சித்ததாகவும் இவர்கள் அனைவர் மீதும் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ள பொலிஸார் அனைவரும் போக்குவரத்து பொலிஸ் சேவையில் கடமையாற்றியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதையடுத்தே குறித்த பொலிஸாரைக் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

துருக்கியில் ஊழல் மற்றும் குற்றச்செயல்கள், அரச சேவையாளர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் மத்தியில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில் விசேட சிகிச்சைகள்

(பாண்டிருப்பு நிருபர் கேதீஸ்)

**க**ல்முனை ஆதார வைத்தியசாலையில் விசேட வைத்திய சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

'கண்' தொடர்பான நோய்களுக்கு இம்மாதம் 18 ஆம் திகதி செவ்வாய் கிழமையும், காது, மூக்கு தொண்டை தொடர்பான நோய்களுக்கு 22 ஆம் திகதி சனிக்கிழமையும் விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்டு சிகிச்சையளிக்கப்படவுள்ளதால் கல்முனை ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு மாவட்ட வைத்திய அதிகாரி எம்.ஞானகுமார் அறிவித்திருக்கிறார்.

## 11 சடலங்கள் கையளிப்பு

(ஜவ்வர்)

**நே**ற்று முன்தினம் கஞ்சிக்குடி ஆற்றில் இடம் பெற்ற விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான மோதலின்போது உயிரிழந்த பதினொரு விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் நேற்று கையளிக்கப்பட்டன.

## இலக்கிய மேம்பாடு அரங்கு

(மட்டக்களப்பு)

**ம**ட்டக்களப்பிலே இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் மாதந்தோறும் இலக்கிய மேம்பாட்டு அரங்கினை நடாத்துவதற்குரிய ஒழுங்குகளை 'எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்' மேற்கொண்டு வருகின்றது.

இந் நிகழ்வுகளில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள், இளம் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் தங்கள் பெயர், முகவரிகளை

**ஓ.கே.குணநாதன்**
**(எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்)**
**64, கதிர்காமர் வீதி,**
**அமிர்தகழி,**

மட்டக்களப்பு - என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

# இடவசதிக்குறைவினால் 250 ஆசிரியர்களுக்கே மட்டக்களப்பு பயிற்சிக் கலாசாலையில் அனுமதி

(அரியம்)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் இம்மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படவுள் ளனர். இக்கலாசாலையில் போதிய இடவசதிகள் இன்மையால் சுமார் 250 பேர் மட்டுமே இவ்வருடம் அனு மதிக்க முடியும் என அரசினர் ஆசி ரியர் கலாசாலை அதிபர் எஸ்.தெய் வேந்திரன் தினக்கதிருக்கு தெரிவித் தார்.

முதலாம் வருட மாணவர் களுக்கான விடுதி வசதிகளும் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் இல்லாமையினால் இம் மாணவர்கள் தனியார் வீடுக ளிலேயே தங்கி இருக்க வேண்டிய நிலையுள்ளதாகவும் கூறினார்.

இவ்வருடம் அனுமதி பெறப்பட்டுள்ள மாணவர்களில் அதி கமான மாணவர்கள் வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர்களே இவர்களுக்கான அனுமதிக்கடி தங்கள் தபாலில் போய் சேர்வதற்கு காலதாமதம் ஏற்படும் எனவும் தெரி வித்தார்.

மட்டுநகர் அரசினர் ஆசிரி யர் பயிற்சிக்கலாசாலையில் இவ்வ ருடம் அனுமதிக்கப்படவுள்ளவர்க ளில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் 93 பேர், கணிதம் 28, விஞ்ஞானம் 32, விவசாயம் 20, மனையியல் 20, சமயம் 20, ஏனையவை 20 என மொத்தமாக 250 மாண வர்களுக்கு போதிப்பதற்கான வசதி கள் மட்டுமே உள்ளது எனவும் கலா சாலை அதிபர் மேலும் தெரி வித்தார்.

# புகைத்தல் எதிர்ப்புக்கொடி விற்பனையில் வசூல்

(மருதமுனை ஹரீஷா)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கல்முனைப்பிரதேச செயலகத்திற் குட்பட்ட மருதமுனை நற்பிட்டி முனை சமுர்த்தி வலயத்தில் ரூபா 22,560.25 சதத்திற்கு கொடி விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மேற்படி வலயத்திற்குப் பொறுப்பான சமுர்த்தி முகாமையாளர் பரீறா சஹீட் தெரிவித்தார்.

கொடி விற்பனை செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத் தர் பெயரும் பின்வருமாறு:-

மருதமுனை 1ம் பிரிவு ஏ.பி.எம்.நவாஸ் ரூ.1515, 2ம் பிரிவு பீ.எம்.எம்.இல்யாஸ் ரூ.3016, 3ம் பிரிவு எஸ்.எம்.பைஸால் ரூ.2490, 4ம் பிரிவு எஸ்.ஷைபுத்தீன் ரூ.1026, 5ம் பிரிவு எம்.எஸ்.எம்.நாஸிர் ரூ.1682, 6ம் பிரிவு பீ.எம்.இஷ்றாக் ரூ.1047.50, பெரிய நீலாவணை 1ம் பிரிவு ஜே.எம்.ஜெமீல் ரூ.1006.50, 2ம் பிரிவு ஏ.கமால்தீன் ரூ.720, பெரிய நீலாவணை 2ம் பிரிவு (முஸ்லிம் தமிழ் பிரிவு) எம்.எல்.எம். றஊப் ரூ.3613.50, பாண்டிருப்பு 1ம் பிரிவு (முபா) எம்.ஐ.எம்.முஜீப் ரூ.1015, நற்பிட்டிமுனை 1ம் பிரிவு ஐ.எல்.ஏ.கலீல் ரூ.1096.25, 2ம்பிரிவு எம்.ரி.அமீனுத்தீன் ரூ.1103.50, 3ம் பிரிவு எம்.யூ.எம்.அஸ்ஹர் ரூ.1087, 4ம் பிரிவு ஏ.எஸ்.எம்.ஜ.ஃபர் ரூ.1011, 5ம் பிரிவு இஸட் உமரு நாச்சி ரூ.1131

மேற்படி வலயத்திலிருந்து பெரிய நீலாவணை முஸ்லிம் தமிழ் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எல்.எம்.றஊப் ஆகக் கூடுதலான தொகையான ரூ.3613.50 சதத்திற்கு விற்பனை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதுக்காத்தான்குடியில் நாளை மீலாத் விழா

(காத்தான்குடி நிருபர்)

மட்/புதிய காத்தான்குடி பிர்தௌஸ் வித்தியாலயம் ஏற்பாடு செய்துள்ள மீலாத் விழாவும், பரிச ளிப்பு விழாவும் நாளை வெள்ளிக் கிழமை இவ் வித்தியாலய முன்ற லில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் யூ.எல்.எம்.ஹனீபா தலைமையி லான இவ்விழாவில் மட்டக்களப்பு பிரதிக்கல்விப்பணிப்பாளர் செ.கிருஷ்ணராஜா பிரதம அதிதி யாகவும், காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அறுபுக் கல்லூரி விரிவுரை யாளர் கவிமணி எம்.எச்.எம்.புஹாரி சிறப்பு பேச்சாளராகவும் காத்தான் குடி உதவிக்கல்விப்பணிப்பாளர் எம்.ஐ.ஏ.லெத்தீப், பிரதேச செயலாளர் எம்.சீ.எம்.சரீப், மட்டக் களப்பு ஆசிரிய நிலைய இணைப் பாளர் திருமதி.பீ.எம்.யூ.சாகிப் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

# இணைத்தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையின் பொதுக் கூட்டத்தில் கடந்த மூன்றாந் திகதி நடந்த இணைத்த லைவராகத் தெரிவு செய்யப்பட்ட ஏ.கே.குணநாதன் அந்தப் பதவியி லிருந்து ராஜினாமா செய்து செய லாளருக்கு கடிதம் அனுப்பியுள் ளார்.

இணைத்தலைவர் பதவி யென்பது யாப்பிற்குப் புறம்பாக புதியதாக இணைக்கப்பட்ட பதவி யாகும். தேவை கருதி அப்பதவி சேர்த்துக் கொள்ளப்படுவதாயினும் அப்பதவிக்கு நான் பொருத்தமா னவன் இல்லை எனக் கருதுகி ன்றேன். ஏனெனில் மட்டக்களப்பில் தமிழ் பேசும் இரு இனத்தவர்கள் இருப்பதனால் ஒரு தலைவர் பதவி ஒரு தமிழருக்கு வழங்கப்பட்டால் அடுத்த பதவி ஒரு முஸ்லீமுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே சத்தியம். ஒரு தலைவர் பதவி வை. அரசிங்கத்திற்கு வழங்கப்பட்டது. அவர் ஒரு தமிழர். எனவே எனது தலைவர் பதவி ஒரு முஸ்லீமுக்கு வழங்கப்படல் வேண்டும்.

ஒரு எழுத்தாளன் என்ப வன் விட்டுக் கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் நடக்க வேண்டும் என்று எண்ணுபவன் நான்.

இளம் எழுத்தாளர்களா கிய நாங்கள் மூத்த எழுத்தா ளர்களை மதித்து நடக்க வேண்டும். அப்படியென்றால் தான் நாங்கள் மூத்த எழுத்தாளர்களாக வரும் பொழுது எங்களையும் இளம் எழுத்தாளர்கள் மதிப்பார்கள் என்று உணர்பவன் நான்.

இணைத்தலைவர் பதவி யை ராஜினாமா செய்து கொண்டு சாதாரண உறுப்பினராக இருந்து கொண்டு இலக்கிய சேவையாற் றவே விரும்புகின்றேன் என்றும் எனவே எனது ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கடிதத்தில் குணநாதன் தெரிவித் துள்ளார்.



மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ.நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வரும் 'வாழ்வோசை' யில் பயின்று வரும் செவிப்புலனற்ற வாய் பேசமுடியாத சிறார்களுக்காக மட்டக்களப்பு உலக தரிசனம் நிறுவனத்தினரால் அச்சிறுவர்களுக்காக செவிப்பன்னிகளை அண்மையில் அன்பளிப்புச் செய்தது. அதன் போது சிறுவர்களுக்கு அக்கருவிகளை உலக தரிசன நிறுவனத்தினர் அணிவிப்பதை படத்தில் காணலாம்.

(படம்:- ரமேஷ்)

# பொது நூலகத்தை இடமாற்றக் கோரி அமைச்சருக்கு மகஜர்

(அக்கரைப்பற்று நிருபர் எம்.பீ.ஏ.ஹாறூ)

அக்கரைப்பற்று கிழக்கு மீரா நகர பொது வாசிகசாலையை மீரா நகரிலுள்ள கிராமியத் தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்திற்கு மாற்றித் தருமாறு கோரி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான றஊப் ஹக்கீ முக்கு மீரா நகர் பொது நூலக வாசகர் ஒன்றியத்தினால் அனுப்பப ட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கல்வி, கலாசாரம், இலக் கியம் போன்ற பல்வேறு துறை களிலும் அதீத அக்கறையும் ஈடுபாடும் கொண்ட இப்பிரதேச மக்களின் நன்மை கருதி அமைக்கப்பட்ட இவ் வாசிகசாலைக்கு வரும் வாசகர் களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அருகிக் கொண்டு செல்கின்றது. இதற்குக் காரணம் இவ்வாசி கசாலை கடற்கரையோரத்தில் ஒதுக்குப்புறமாகவும் மக்கள் பரந்து வாழாத இடத்திலும் அமைந்துள் ளமையே ஆகும்.

இவ்வாசிகசாலையை, மக்கள் பரந்து வாழும் பிரதேசமான கிராமியத் தொழிற்பயிற்சி நிலையக் கட்டிடத்திற்கு மாற்றுவதுடன், தொழிற்பயிற்சி நிலையத்தை தற்போதைய வாசிகசாலைக் கட்டி டத்திற்கும் மாற்றுவது இப்பிரதேச வாசகர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் பிரதிக் கல்வியமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, அக்கரைப்பற்றுப் பிரதேசச் செயலாளரும் விசேட ஆணையாளருமான ஏ.அப்துல் மஜீத் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

# ஆசிரியர் இடமாற்றத்தை எதிர்த்து மனிதவுரிமை இல்லம் வழக்கு!

(அக்கரைப்பற்று நிருபர் எம்.பீ.ஏ.ஹாறூன்)

அக்கரைப்பற்று பள்ளிக் குடியிருப்பு பாயிஷா மகா வித்தி யாலயத்தில் கடமையாற்றிய ஆசிரி யர் எம்.ஏ.அமீனுடீன் கடந்த பாராளு மன்ற பொதுத் தேர்தல் எதிரொலி யாக பொத்துவில் மத்திய கல் லூரிக்கு திடீர் இடமாற்றம் செய்யப் பட்டதை எதிர்த்து கொழும்பு உயர் நீதி மன்றத்தில் நாக்கல் செய்யப் பட்ட வழக்கு இம்மாதம் 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கெதிராகக் கடந்த 26-02-2001 அன்று மனித உரிமைகள் இல்லத்தினால் தொடரப்பட்ட இந்த வழக்கின் மனுவில் இவரது இடமாற்றம் முறையற்றது, சட்ட விரோதமான தென்றும் அரசியல் யாப்பின் 12(1), 12(2) சரத்துக்களில் உத்தரவாத மளிக்கப்பட்ட தனிநபர் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும், ஆகவே பொத்துவில் மத்திய கல்லூரிக்கு அவர் இடமாற்றம் செய்யப்பட்டதை இரத்துச் செய்யுமாறு கோருவ தாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் 3ம் திகதி கொழும்பு உயர் நீதி மன்றின் முன் இம்மனு பரசீலிக்கப்பட்டு மன்றில் ஆஜராகுமாறு மனுதாரருக்கு அறிவித்தல் வழங்குமாறு நீதிமன்றம் பணித்திருந்தது.

# மணிவாசகர் விழாப்போட்டி முடிவுகள்

(காரைதீவு நிருபர்)

காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் அண்மையில் மாணிக்கவாசகரின் குரு பூசையை முன்னிட்டு காரைதீவுக் கோட்ட பாடசாலைகளிடையே நடைபெற்ற நாவன்மை பண்ணிசைப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

**பண்ணிசைப்போட்டி**

**நிலை 1**

1ம் இடம்:- ச.ஜெயநளினி - இ.கி.மி.பெண்கள் பாடசாலை

2ம் இடம்:- சு.யசா - இ.கி.மி. பெண்கள் பாடசாலை

3ம் இடம்:- பா.மகிந்தன் - சண்முக வித்தியாலயம்

**நிலை 2**

1ம் இடம்:- ச.நிதர்சனா - விபுலானந்தா மத்திய கல்லூரி

2ம் இடம்:- கி.சுஜாதா - விபுலானந்தா மத்திய கல்லூரி

3ம் இடம்:- இ.யுகேநிதா:- இ.கி.மி.பெண்கள் பாடசாலை

**நிலை 3**

1ம் இடம்:- ச.நிவேதிகா - விபுலானந்தா மத்திய கல்லூரி

2ம் இடம்:- ம.நிருபா - விபுலானந்தா மத்திய கல்லூரி

3ம் இடம்:- கி.சர்மிளா - விபுலானந்தா மத்திய கல்லூரி

**நாவன்மைப்போட்டி**

**நிலை 1**

1ம் இடம்:- யோ.கேதிலன்:- இ.கி.மி.ஆண்கள் பாடசாலை

2ம் இடம்:- ச.சாலினி - இ.கி.மி.பெண்கள் பாடசாலை

3ம் இடம்:- தி.கிருத்திகா - இ.கி.மி.பாடசாலை

**நிலை 2**

1ம் இடம்:- வி.பிரபாலின் - விபுலானந்தா மத்திய கல்லூரி

2ம் இடம்:- கு.துவாரகா - விபுலானந்தா மத்திய கல்லூரி

3ம் இடம்:- ந.விஜயனந்தி - விபுலானந்தா மத்திய கல்லூரி

**நிலை 3**

1ம் இடம்:- க.தேவதர்ஷிகா - விபுலானந்தா மத்திய கல்லூரி

2ம் இடம்:- ம.கிருஷாந் - விபுலானந்தா மத்திய கல்லூரி

3ம் இடம்:- ம.சஞ்சீவ் - விபுலானந்த மத்திய கல்லூரி

# தனியார் கல்வி நிறுவனங்கள்

# மாணவர் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம்

ஆக்கம்:-
எஸ்.சந்திரகுமார்
சேனைக்குடியிருப்பு
கல்முனை

இந்த நூற்றாண்டில் வாழும் அனைவரும் கல்வி அறிவுடையோராக வாழ வேண்டியது முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. ஏனெனில் எமது சகல தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு கல்வி இன்றியமையாதது ஆகும். இதன் காரணமாகத்தான் இன்று சகல நாடுகளிலும் உள்ள அரசுகள் தம் கீழ் வாழும் மக்களுக்கு கல்வியினை பல்வேறு வழிகளில் வழங்குவதனை நாம் கண்கூடாக காணலாம். இதன் அடிப்படையில் தான் எமது நாட்டு அரசும் இலவசக் கலவி , இலவசப் புத்தகம், இலவச சீருடை போன்றவற்றை வழங்கி வருகின்றது.

கல்வியின் முக்கியத்துவம் எமது சமூகச் சூழலில் முக்கியத்துவம் பெற்றதன் காரணமாக உதயமானதே தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகும். கல்வியின் நோக்கம் மாற்றங்களை சமூகத்தில் ஏற்படுத்துவதாகும். தனியார் கல்வி நிறுவனங்களும் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் அதே வேளை அந்நிறுவனங்களில் கல்விப்பிலும் மாணவர்களின் நடத்தையிலும் மாற்றத்தை ஏற்படுத்த தவறவில்லை என்று தான் கூற வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் பாடசாலை கல்வியினை சரியான முறையில் பெற முடியாதவாறு போர்ச்சூழல், ஒரு சில ஆசிரியர்களின் அசட்டைப் போக்கு, நிருவாகச் சீர்கேடுகள் போன்றவை மாணவர்களை பாதித்து இருக்கும் வேளையில் மாணவர்கள் மேலதிகக் கல்வியினை பெறும் பொருட்டு தனியார் கல்வி நிறுவனங்களை நம்பி இருக்க வேண்டிய அவசியம் ஏறபடுகிறது.

## ''காலை எழுந்தவுடன் ரியூசன்''

தனியார் கல்வி நிறுவனங்களின் தோற்றம் காரணமாக மாணவர்கள் தம் ஓய்வு நேரங்களை வீண் விரயம் செய்யாமல் கல்விக்காக தியாகம் செய்வதை நாம் காணலாம். "காலை எழுந்தவுடன் படிப்பு" என்ற பாரதியின் வாக்கு இன்று "காலை எழுந்தவுடன் ரியூசன்" எனக் கூறவைக்கும் அளவுக்கு அவர்கள் இக்கல்வியில் ஈடுபடுவதை நாம் காணலாம். இதன் பின்பு அவர்கள் பாடசாலைக்கு செல்ல வேண்டியதன் நிமித்தம் காலை உணவை விடுத்தோ, சுருக்கியோ பாடசாலைக்குப் பறக்கின்றார்கள். பாடசாலை விட்டு வந்ததும் பின்னர் மீண்டும் பிற்பகலிலும் ரியூசனுக்கு செல்கின்றார்கள். இதன் காரணமாக மாணவர்கள் இயந்திரம் போன்று இயங்குவதைக் காணலாம். மாணவர்கள் இவ்வாறு செயற்படுவதனால் களைப்பு அவர்களை ஆட்கொள்கிறது. இதனால் அவர்கள் பாடசாலையில் கொடுக்கப்படும் வீட்டு வேலைகளைக் கூட செய்ய முடியாமல் தவிப்பதை நாம் காணலாம்.

தனியார் கல்வி நிறுவனங்களின் அதிகரிப்பினால் ஆசிரியர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் போட்டி ஏற்படுகின்றது. ஒவ்வொரு ஆசிரியரும் தமது முழுத்திறமைகளையும் வெளிக்கொணர்ந்து மாணவர்களை தம்பக்கம் ஈர்க்க முயற்சிப்பதை நாம் காணலாம். வீதிகளிலும், சுவர்களிலும் காணப்படும் சுவரொட்டிகள் இப்போட்டியின் தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

தனியார் கல்வி நிறுவனங்களின் தோற்றமானது மாணவர் நடத்தையில் பல வகையான நன்மையான், தீமையான, தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது, ,ஏற்படுத்தி வருகின்றது.

பாடசாலைக்கல்வியினை மாணவர்கள் முழுமையாக இக்கால கட்டத்தில் பெற முடியாது இருக்கின்றது. இதற்கு போர்ச்சூழல் முக்கிய தடையாக இருப்பதை நாம் காணலாம். ஷெல், விமானத்தாக்குதல் போன்றவற்றிற்கு எமது மாணவர்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலையிலும், பல பாடசாலைகள் இராணுவ முகங்களாக மாறியுள்ள, மாறிக் கொண்டு வரும் இந்நிலையில் மாணவர்களால் பூரணமான கல்வியினை பாடசாலை மூலமாக பெறமுடியாது இருக்கும் இந்நிலையில் மாணவர்களின் கல்வியில் தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு அவசியமானதாக இருக்கின்றது.

தற்போதைய கல்வி முறை போட்டியுடன் கூடிய கல்வி முறையாக இருப்பதை நாம் காணலாம். உதாரணமாக ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் செல்லும் வரை போட்டிப்பரீட்சையை எதிர் நோக்கும் மாணவர்கள் தமது இலக்கினை அடைவதற்கு மேலதிக கல்வியினை பெற்றுக் கொள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் முக்கியமானதாக அமைந்து காணப்படுகின்றது.

## தீமையும் நன்மையும்

தனியார் கல்வி நிறுவனங்களில் படிக்கும் போது ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து பழகவும் சமுதாய அனுபவங்களைப் பெறவும் முடிகின்றது. மாணவர்கள் கிணற்றுத் தவளைகளாக இருக்காமல் உலக நடத்தைகளையும் அறிந்து கொள்ளவும் இந்நிறுவனங்கள் உதவுகின்றது என்றால் மிகையில்லை. மேற்கூறியவாறு தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களது நடத்தையில் அனுகூலமான மாற்றங்களை ஏற்படுத்தினாலும் அவர்களது நடத்தையில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படவும் வழி செய்துள்ளது.

கல்வித்துறையில் அறிவு ரீதியான ஏற்றத்தாழ்வுகளைத் தவிர எவ்விதமான ஏற்றத்தாழ்வுகளும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே கல்வியில் இலவசக்கல்வி, இலவச சீருடை, இலவச புத்தகம் என்பன புகுத்தப்பட்டன. ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களின் உருவாக்கம் மாணவர் மத்தியில் ஏற்றத்தாழ்வுகளுக்கும், தாழ்வு மனப்பான்மைக்கும், ஒழுக்கச் சிக்கல்களுக்கும் காரணமாகவும் அமைந்து காணப்படுகின்றது.

தனியார் கல்வி முறையிலே கல்வியை தீர்மானிக்கும் பிரதான கருவியாக பணம் காணப்படுகின்றது. பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களில் சிலர் பாடசாலையில் கற்பிக்க வேண்டிய பாடங்களை கற்பிக்காமல் விட்டு ரியூசன் என்ற போர்வையில் இலாப நோக்கில் கல்வியை ஊட்ட முயல்வதை நாம் காணலாம். இதன் காரணமாக

(7ம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்கு

### இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

**ஆசிரியர்**

---

# நட்சத்திரப்பலன்

## சித்திரை (14)

**கடுகியே நடக்க வல்லன்
கன்றியானத் தனாகு
மிடுக்க மாங்காலந் தன்னிலீன்ற
தாய் தந்நை- பேணுந்
குடியிடை மைந்தர்மாதர்
சுகங்களும் சுகிக்க வல்லன்.
திடமது பேசவல்லன் சித்திரை
நாளினானே.**

(மரண கண்டி சாஸ்திரம்)

சித்திரை நட்சத்திரம் செவ்வாய்க்கு உரியதாகும்.

இதன் முதல் இரண்டு பாதங்கள் கன்னியா ராசியின் 23-20 முதல் 30 பாகை வரையிலும் இதன் மூன்று நான்காம் பாதங்கள் துலாராசியின் முதல் 6-40 பாகை வரையிலும் வியாபித்திருக்கும்.

முதல் இரண்டு பாதங்களில் சந்திரன் இருக்கப் பிறந்தவர்கள். புதன், செவ்வாய், சந்திரன் என்னும் மூவரின் ஆதிக்கம் பெற்றவர்கள். மூன்று நான்காம் பாதங்களில் பிறந்தவர்கள் சுக்கிரன், செவ்வாய், சந்திரன் ஆதிக்கம் பெற்றவர்கள்.

'சித்திரையில் குழந்தை பிறப்பது குடும்பத்துக்கு ஆகாது' என்று ஒரு பேச்சு வழக்கில் உள்ளது. பிறருக்குத் தத்தாகத் தந்து மீண்டும் பெற்றுக்கொள்வது கிராமாத்து வழக்கமாகவும் உள்ளது. இவைகளுக்கு ஜோதிட நூல்களில் எந்த ஆதாரமும் சொல்லப்படவில்லை.

### பொதுவான குணங்கள்

சித்திரையில் பிறந்தவர்கள் அகன்ற மார்பும் அழகான உடல் உறுப்புக்களும் அமையப் பெற்று எடுப்பாகத் தோன்றுவார்கள். செவ்வாயும் சந்திரனும் வலுவான அழகான உடலமைப்பைக் கொடுத்திருக்கும்.

விதம் விதமாக உடுத்து மகிழ வேண்டும்,அலங்காரம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசைப் படுகிறவர்கள் இவர்கள்.

இவர்கள் கண்களில் சோபனமான பார்வை பொங்கிக் கொண்டிருக்கும் எவரையும் கவர்ந்து கொள்கின்ற குளிர்ந்த பார்வை அது.

இவர்கள் நல்ல குணங்கள் அமைந்தவர்களாகவும் இருப்பார்கள். கோபம் வந்தால் மட்டும் கடினமான பேச்சைக் கொட்டிவிட்டு கோபம் தீர்ந்ததும் வருந்துவார்கள்.

காலாற நடந்து போவதிலே ஒரு வகை விருப்பம் மிகுந்தவர்கள். அடிக்கடி காரணமின்றி எங்காவது போய்வந்து கொண்டிருப்பார்கள். இதில் ஒரு மனவமைதியும் பெறுவார்கள்.

எதையும் தள்ளிப் போடுகின்ற ஒரு வகை தாமத குணமும் இவர்களில் பலரிடம் காணப்படும். முதல் இரண்டு பாதங்களிற் பிறந்தவர்களிடம் இதைச் சற்று அதிகமாகக் காணலாம்.

பேச்சிலே உறுதியான தன்மை கொண்டவர்கள். சொன்னால் சொன்னது தான் எதையும் நன்றாக நினைத்தே சொல்வார்கள். சொற்களை மாற்றவும் மாட்டார்கள்.

சிக்கனமானவர்கள் என்று கூறலாம். தாராளமாகச் செலவிட்டு மகிழும் மனப்போக்கைக் காணமுடியாது.

தங்களிடம் வந்து கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி முறையிடுபவர்களுக்கு ஆதரவாகப் பேசி அவர்களை அமைதி கொள்ளச் செய்யும் இயல்பும் இவர்களிடம் காணப்படும்.

இவர்களுக்குப் பெண்களிடம் பாசம் அதிகம்.காம விருப்பம் மிகுதி தான்.

விசாலமான கண்களும் நீண்ட பாதமும் மெல்லப் பேசும் பேச்சும் இவர்களின் சிறப்பு அம்சங்கள் எனலாம். இடது பக்கத்தில் உடலில் மச்சங்கள் காணப்படுவதும் உண்டு. வாசனைப் பொருட்களை விரும்பிப் பயன்படுத்துவதும் இவர்கள் இயல்பாகும். இந்த சித்திரையில் ருதுவாகும்.

பெண்கள் தன தானிய சந்தான சம்பந்துக்களைப் பெற்று உத்தமமான குடும்பத் தலைவியாக விளங்குபவர் ஆவார்கள்.

### நான்கு பாதங்கள்

முதற் பாதத்திற்கு உரியவர்களுக்கு அம்சாநாதன் சூரியன் ஆவதால் இவர்கள் அரசாம்சம் பெற்றவர்கள் என்று கூறலாம். செல்வாக்குள்ளவராகவும் பலரையும் வேலை வாங்கும் உயர்வான நிலையினராகவும் விளங்குவார்கள். அரசாங்க அலுவல்களிலும் புகழ் பெறலாம். இவர்களிடம உள்ள குறை சபலமான மனப்போக்கு ஒன்று தான். இதை மாற்றிக் கொண்டால் நன்மைகள் பெருகும்.

இரண்டாம் பாதத்திற்கு உரியவர்களுக்கு கன்னியா புதன் அம்சநாதனாக விளங்குவார். இவர்களிடம் மனோதைரியமும் செயலூக்கமும் குறைந்தே காணப்படும். எவராலும் வற்புறுத்தித்தான் இவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். பேச்சிலே இனிமை விளங்கும். படிப்பறிவு மிகுதியாகவும் ஏற்படும். தெய்வ வழிபாடுகளில் ஈடுபாடு மிகுதியாக விளங்கும். ஏதாவது ஒரு தொழில் அல்லது பதவியில் நிம்மதியாகக் காலங் கடத்த முயல்வார்கள்..

மூன்றாம் பாதத்துக்கு உரியவர்களுக்கு துலாச் சுக்கிரன் அம்ச நாதன் ஆவார். இந்தப் பாதத்தில் பிறந்தவர்களுக்கு மற்றவர்களுக்கு உதவி மகிழும் பரோபகார குணம் மிகுதியாகக் காணப்படும். கலையார்வமும் ஈடுபாடும் உள்ளவர்கள். வாழ்க்கையைச் சுகமாக நடத்த வேண்டும் என்ற ஆசையுடையவர்கள். சிலருக்கு சாத்திரங்களில் ஆர்வம் இருக்கும்.

நான்காம் பாதத்திற்கு உரியவர்களுக்கு விருச்சிகச் செவ்வாய் அம்சநாதன் ஆவார். இவர்களுக்கு மிகுந்த உடல் வலிமை அமைந்திருக்கும். அதற்குத் தகுந்த துணிச்சலும் இருக்கும். தவறான வழிகளில் மனம் போகும். சிலர் இத்தகைய சமூக விரோதக் கூட்டததையே தலைமை வகித்தும் நடத்தி வரக் கூடும். இவர்கள் காவல்துறை , படைத்துறை போன்றவைகளில் சிறப்பாக விளங்கக் கூடியவர்கள்.

### பெண்களைப் பற்றிவை.

சித்திரையிலே பிறந்த பெண்கள் அழகான கவர்ச்சியான உடலமைப்புப் பெற்றிருப்பார்கள். விதம் விதமாக உடைகளையும் நகைகளையும் அணிவதில் மகிழ்வார்கள். சித்திரையோடு வளர்பிறை தேய்பிறை சதுர்த்தியும் சேர்ந்தால் நன்மையானதல்ல என்று கூறப்படுகிறது. 'விஷகன்யா யோகம்' என்பார்கள். சாந்தி செய்வது மிகவும் அவசியம்.

இயக்கித் தத்துவம் என்று இவர்களைக் குறிப்பிடுவதும் உண்டு. இவர்களுக்கு எப்போதும் கையிலே காசு இருந்து கொண்டே இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும் என்ற மனப்போக்கு அதிகமாகும்.

படித்தவர்களிடமும் பெரியவர்களிடமும் மிகவும் மரியாதை காட்டுவார்கள். பக்தியில் மிகவும் தீவிரமானவர்கள். பழைய சம்பிரதாயங்களில் சிறிது கூட விட்டுக் கொடுக்காமல் நடந்து கொள்வார்கள். பரோபகாரச் சிந்தையால் பலருடைய அன்பையும் பெற்று வாழ்வார்கள்.

### சிறப்புச் செய்திகள் சில

சித்திரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களின் மிருகமாக "புலி" கூறப்படுவதை நினைக்க வேண்டும். புலியின் தன்மைகளிற் பல இவர்களிடமும் காணப்படும். அந்த ஆற்றல், மனவுறுதி, கம்பீரம், எல்லாம் சிலரிடம் நிறைந்து காணப்படும்.

பறவையாக கூறப்படுவது மரங்கொத்தியாகும். மறைந்து விளங்கும் பொருள் நலங்களையும் முயன்று பெற்று விடுபவர்கள்.- இவர்கள் என்பதை இது உணர்த்தும்.

குவளை மலர் இவர்களுக்கு ராசியானது. ஒரு தொட்டியில் நீரூற்றி வைத்து வளர்த்தால் நன்மை மிகுதியாகும்.

விவசாய வேலைகளுக்கு மிகவும் சிறப்பான நட்சத்திரம் சித்திரையாகும். அரசாங்கம் தொடர்பான காரியங்களைக் கவனிக்கவும் சிறந்த நட்சத்திரம் இது. இதனோடு சதுர்தசி திதி வருவது மட்டும் .தவிர்க்கப்பட வேண்டும். செவ்வாய் புதன் சனிக்கிழமைகளில் வந்தாலும் தவிர்ப்பது நல்லது.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பெரும்பாலும் தங்கள் சுயமுயற்சியால் முன்னேற்றம் அடைபவர்கள் என்றும் கூறலாம்.

பெயர் அமைப்பது பற்றி சித்திரை நட்சத்திரத்திற்குரிய பெயரின் முதல் எழுத்துக்கள் பே,போ, ரா,ரீ என்பார்கள். ஒவ்வொரு பாதத்திலே பிறந்தவர்களும் இந்த எழுத்துக்கள் அமையும் பெயர்களை வைத்துக் கொள்ளலாம். ரா எழுத்தில் தொடங்கும் பெயர்கள் மிகுதி. பிற எழுத்துக்களில் பெயர்கள் தொடங்குவது குறைவு தான். எனவே இடையில் வருமாறு அமைத்துக் கொள்ளலாம். சித்திரை: படித்தவர்கள், குணசாலிகள் பரந்த நோக்குடையவர்கள், எதிரிகளின் பலாபலன்களையும் குணாதிசயங்களையும தெரிந்து கொண்டு அதன்படி நடப்பவர்கள். வாழ்க்கையில் வெற்றி பெற்று கீர்த்தியுடன் விளங்குவார்கள்.

ஒரு சிலர் காரியவாதிகளாகவும் ஊர் சுற்றும் பழக்க வழக்கங்களையும் கொண்டர்களாகவும் கிளிப் பிள்ளை போல் சொன்னதையே சொல்லிக் கொண்டிருப்பவர்களாகவும். ஸ்திர புத்தி இல்லாதவர்களாகவும் வியாதிகளுடன் கூடிய தரித்திர வாழ்க்கை நடத்துபவர்களாகவும் இருப்பார்கள்.

சுருக்கம்: சாதாரண வாழ்க்கை வாழக் கூடியவராகவும் அழகாக இனிமையாகப் பேசக் கூடியவராகவும் இருப்பார்கள்.

வே.தவராசா
சோதிடர்
குருக்கள்மடம்




# குத்துச் சண்டை மல்யுத்த விளையாட்டு பலவிதம்


(ச.பிரகாஸ்)

குத்துச்சண்டை மல்யுத்தம் போன்ற 09 விளையாட்டுக்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு நாடுகளின் தனிரக கலைகளில் ஒன்றாக அமையப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

அந்த வரிசையில் கீழ் வரும் மாதிரிப் படங்கள் அமைகின்றன.



மொங்கேலியன் ரெஸ்லிங் (Mongolian Wrestling)







# தனியார்.........


*(6ம் பக்க தொடர்ச்சி)*

..ரகளுக்கு அவர்களது கல்வியை ..ளப்படுத்த உதவுகின்றது. இம்மா..வர்கள் குறிப்பிட்ட ஒரு பாடத்தை பல ஆசிரியர்களிடம் கற்பதையும் நாம் காணலாம். ஆனால் இது வறிய மாணவர்களால் முடிவது இல்லை. இந்நிலை மாணவர் பருவத்திலேயே மாணவர்களுக்கு கல்வியைக்கற்க வேண்டுமாயின் பணம் முக்கியமானது என்ற எண்ணமும், பணமே பலமானது என்ற சிந்தனையும் அவர்களுக்கு தோன்ற, இயல்பாகவே அவர்களுக்கு தாழ்வு மனப்பாங்கு ஏற்பட தனியார் கல்வி நிறுவனங்கள் துணை போகின்றது என்றால் அதை மறுப்பதற்கில்லை. மேலும் வசதி குறைந்த மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு கல்வி கற்க போகும்போது ஏனைய மாணவர்களைப்போல உடை, நகை போன்றவற்றை அணிந்து செல்ல முடியாமல் இருப்பதன் காரணமாகவும் அவர்களுக்கு தாழ்வுச்சிக்கல் ஏற்படுகின்றது. இந்நிலமை வறிய மாணவர்களுக்கு கல்வியினை தொடர முடியாதவாறு தடைபோடுகின்றது.

### வியாபார மனப்பாங்கு

இந்நிறுவனங்களின் நோக்கத்தினால் ஆசிரியர்களை மதிக்காத நிலைமை மாணவர் மத்தியில் ஏற்படுகின்றது. ஆசிரியர்களிடம் பணம் கொடுத்துத்தானே நாம் படிக்கின்றோம் என்ற மனநிலை மாணவர்களுக்கு ஏற்பட ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய மதிப்பையும், மரியாதையையும் கொடுக்க தவறுகின்றார்கள். மேலும் இக்கல்வியினால் சுய தேடலுக்கோ, சிந்தனைக்கோ மாணவர்களை இட்டுச் செல்லாமல் ஆசிரியர்களின் குறிப்புக்களை, வார்த்தைகளை வேதவாக்காக நம்பி இருக்கவேண்டிய நிலை மாணவர்களுக்கு ஏற்படுகினறது. அத்தோடு தனியார் கல்வி நிறுவனங்களில் கல்விகற்கும் மாணவர்கள் முழுமையான உருவாக்கம் அற்றவர்களாக காணப்படுகின்றனர். ஓய்வற்ற படிப்பின் காரணமாக உடற் சோர்வும், உளநோய்களும் மாணவர்களை ஆட்கொள்ள தமது ஏனைய திறமைகளான கலை, கலாசாரம், விளையாட்டு போன்றவற்றில் ஈடுபட முடியாத நிலை ஏற்படுகின்றது. மேற்கூறியவாறு பல்வேறு வகையான சிக்கல்களை மாணவர் நடத்தையில் தனியார் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ளது, ஏற்படுத்தி வருகின்றது என்றால் தவறில்லை.

எனவே தொகுத்து நோக்கும் போது இன்றைய யதார்த்த உலகில் மாணவர்களின் கல்வியானது பல்வேறு வழிகளில் சிதறடிக்கப்பட்ட இந்நிலையில் தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு மாணவர்களுக்கு இன்றியமையாததாக இருந்தபோதும் கூட, நாளைய சமுதாய சிற்பிகளான இன்றைய மாணவர் சமுதாயத்தை முழுமை பெற்ற சமுதாயமாக உருவாக்குதவற்கு, அவர்களை சரியான முறையில் ஆற்றுப்படுத்துவதற்கு பெற்றோர்களதும் ஆசிரியர்களதும் பங்களிப்பு இன்றியமையாதது ஆகும். இந்நிலையினை பாடசாலைக் கல்வியின் மூலம் அடையலாமே தவிர தனியார் கல்வி நிறுவனங்களில் அல்ல என்பதே உண்மை.



**அகில இலங்கை கல்விக்கல்லூரிகளுக்கு இடையே இடம் பெற்ற உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் .சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனைக் கல்விக்கல்லூரி அணியினர் தாங்கள் பெற்ற தங்கப் பதக்கத்துடன் காணப்படுகின்றனர். படத்தில் பீடாதிபதி ஏ.எல்.ஏ.றசூல் உடற்கல்வி விரிவுரையாளர்களான எம். ஐ.எம்.முஸ்தபா, எம்.எச்.மன்சூர் ஆகியோர்களும் காணப்படுகின்றனர்.**

**வியாங் கொட சியன கல்விக்கல்லூரி மைதானத்தில் மேற்படி சுற்றுப்போட்!ே அண்மையில் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது.**

**(படமும் தகவலும்: முபா)**

# வாசகர் நெஞ்சம்

## சமுர்த்தி உத்தியோகத்தர் இடமாற்றம்

தங்களது பத்திரிகையில் 01.06.2001 அன்று 'வாசகர் நெஞ்சம்' பகுதியில் வெளியான "சமுர்த்தி உத்தியோகத்தர் இடமாற்றம்" என்ற எட்வேட் நிஷாந்தன் என்பவரது கருத்துக்கான மறுப்பு அறிக்கை இது.

பெரிய நீலாவணை 2ம் பிரிவு சட்ட விரோத மது உற்பத்திக்கும், விற்பனைக்கும் பெயர்போன இடமாகத் திகழ்கிறது. அவ்வாறானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு எனக்கு பிரதேச செயலாளரால் உத்தரவிடப்பட்டது. அதற்கமைய நான் செயற்பட்ட வேளையிலேயே, அதனோடு சம்பந்தப்பட்ட குழுவொன்றினால் என்மீது பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களையும் கூறி, பாமர மக்களிடம் பசப்பு வார்த்தை கூறி ஒப்பங்களைப் பெற்றுக்கொண்டு பிரதேச செயலாளருக்கு முறையிட்டுள்ளனர். பிரதேச செயலாளரும் எந்தவித் விசாரணையுமின்றி தனது சுய விருப்பில் என்னை இடமாற்றம் செய்தார். என்மீது எந்தக் குற்றச் சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை. எனது இடமாற்றத்தை வடக்கு, கிழக்கு மலையக சமுர்த்திப் பணிப்பாளரிடம் முறையிட்டபோது உடனடியாக இடமாற்றத்தை இடைநிறுத்தம் செய்யுமாறு பிரதேச செயலாளரை எழுத்து மூலம் அவர் கேட்டார். அதற்கும் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, எனது இடமாற்றம் சம்பந்தமாக மேல்முறையீடு செய்துள்ளேன்.

அவ்வாறு இருக்கும் போது எட்வேட் நிஷாந்தன் உண்மைக்குப் புறம்பான தகவலைத் தந்ததை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். என்மீது ஊழல் குற்றச்சாட்டு இருக்குமானால் நிஷாந்தன் அதை நிரூபிக்கட்டும்.

மேற்படி செய்தி தொடர்பாக நான் நிஷாந்தன் மீது சட்ட நடவடிக்கைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

**எஸ்.தயானந்தி**
**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**பெரிய நீலாவணை-02**
**கல்முனை**

## றொட்டைப் பகுதியில் மீள் குடியேற்றம்

பொத்துவில் பிரதேசத்தில் றொட்டை என்னும் பகுதியில் கடந்த 30 வருடங்களுக்கு முன்பு குடியேறி இயல்பான வாழ்க்கை நடத்திகொண்டு வந்த தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் நாட்டில் நடைபெற்றுக்கொண்டுவரும் உள்ளூர் யுத்தத்தினால் 1985 ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறி பொத்துவில், திருக்கோவில் போன்ற இடங்களில் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வசித்து வந்தார்கள்.

இவர்கள் இப்போது படிப்படியாக சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 26 குடும்பங்கள் தெரிவு செய்து அவர்களுக்கான வீடுகளை 'வேர்ல்ட் விஷன்' மூன்று மில்லியன் ரூபா செலவில் கட்டி கையளித்துள்ளது. ஒவ்வொரு வீடும் சுமார் 50 ஆயிரம் ரூபா வரையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

றொட்டைக் கிராமத்தில் மீள் குடியேறிய குடும்பங்கள், ஆடு வளர்ப்பதற்கும், நன்னீர் மீன் வளர்ப்பதற்கும், மேட்டு நிலப் பயிர் வகைகளை சாகுபடி செய்வதற்கு சேவாலங்கா என்னும் நிறுவனம் மானிய உதவியாகவும் கடன் உதவியாகவும் வழங்கியுள்ளது.

இப்பகுதியில் மீள் குடியேறியவர்கள் படிப்படியாக இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பிக்கொண்டே வருகிறார்கள். தற்போது பொதுவாக பொத்துவில் பிரதேசத்தில் யுத்தத்தின் காரணமாக வெளியேறிய குடும்பங்கள் சொந்த இடங்களுக்கும் திரும்பியுள்ளார்கள். இன்ஸ்பெக்டர் ஏத்தம் என்னும் இடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாதிரிக் கிராமத்தில் முன்னும் அவர்களுக்கான முழுமையான வசதிகள் கிடைக்கவில்லை. குடிப்பதற்கு கூட குடிநீர் வசதிகள் இல்லை. இவர்களுக்கான ஒரு குழாய் நீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் அவைகள் எல்லாம் வெறும் கடதாசித் திட்டமாகவே இருக்கிறது. இந்த மாதிரிக் கிராமத்திலுள்ள மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கு போசாக்கு முதல் உடை, பாடநூல்கள் இல்லாது இருக்கிறார்கள். இவர்கள் விளையாடுவதற்கு, பல லட்சம் ரூபா செலவில் 'சிறுவர் பூங்கா' அமைக்கப்பட்டு கவனிப்பார் அற்றுப்போய்க் கிடக்கிறது. இந்த பூங்காவை இப்பகுதியிலுள்ள குரங்குக் கூட்டங்களே பயன்படுத்திவருகிறதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**சிவப்பிரகாசம்**
**அக்கரைப்பற்று**

## அதை நான் எழுதவில்லை

கடந்த 05.06.2001ம் திகதிய தினக்கதிர் பத்திரிகையில் 'நேயர் நெஞ்சம்' பகுதியில், கல்முனை பிரதேச செயலகத்தின் அவல நிலை என்ற தலைப்பில் செய்தி எழுதப்பட்டிருந்தது. இச் செய்தியை அனுப்பியவர் ஏ.ஏ.கபூர், நற்பிட்டிமுனை - 04 எனப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இம் முகவரி என்னுடையதாக இருந்தபோதிலும் உண்மைக்கு முரணான இந்தச் செய்தியை நான் உங்களுக்கு அனுப்பி வைக்கவில்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்முனைப் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பழீல் ஒரு சிறந்த நிருவாகி ஆவார். அவருடைய நிருவாகத்தின் கீழ் கல்முனை பிரதேச செயலகம் சிறப்பாக இயங்கி வருகின்றது. இந்த உண்மை நிலையைச் சகித்துக்கொள்ளவும், தன்னுடைய பெயரைக்கூறவும் முடியாத கோழைகளினால் எழுதப்படும் செய்திகள் விடயத்தில் அரச காரியாலயமாக இருப்பதனால் உண்மை நிலையை அறிந்து செய்திகளை பிரசுரித்து உதவுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

-நன்றி- **இவ்வண்ணம்**
**உண்மையுள்ள ஏ.ஏ.கபூர்**
**நற்பிட்டிமுனை**

# பிதரம நீதியரசருக்கு எதிரான விசாரணைக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு!

(நமது நிருபர்)

**பிரதம நீதியரசர் சரன் என். சில்வாவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் தெரிவுக் குழு அமைத்து விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இடைக்கால தடை உத்தரவு விதித்துள்ளனர்.**

பிரதம நீதியரசர் பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால் நீதிச் சேவையின் தனித்துவம் பாதிக்கப்படும் என தெரிவித்து ஜனாதிபதி சட்டத்தரணிகளால் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பான மனுவொன்றினை நேற்றுஉயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.இது தொட ர்பாக ஆராய்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தடை உத்தரவினை விதித்துள்ளனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான சிராணி பண்டார நாயக்கா,பிரியந்த பெரேரா,எஸ்.எஸ்.யாப்பா, ஆகியோரே இந்த தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

## பெற்றோல் விலையை கூட்டி விற்றவருக்குப் பிணையே!

### அபராதம் விதிக்கப்படவில்லை

ஒரு போத்தல் பெற்றோல் அதன் குறிப்பிட்ட விலையான 37.88 சதத்திலும் கூடுதலாக ரூபா 40.00க்கு விற்பனை செய்தமைக்காக விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் ஆ.சௌந்தரராஜா என்பவரால் மொகமட் மொகிடீன் இப்றாகீம் என்வருக்கெதிராக செய்யப்பட்ட வழக்கில்

எதிரி குற்றவாளி என நீதிமன்றில் கூறியதால் அவரை தேசிய அடையாள அட்டையுள்ள ஒர் ஆளுடன் 5000 ஆட் பிணையில் செலுத்துவதற்கு நீதிமன்றம் அனுமதித்தது. எதிர் வரும் 19.07.2001 திகதிக்கு வழக்கு விளக்கத்துக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

எமது 04.06.2001 ந் திகதிப் பத்திரிகையில் 8ம் பக்கத்தில் இது தொடர்பாக வெளியான செய்தியில் குற்றவாளி 5000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தவறுதலாக இடம் பெற்றுவிட்டது.

செய்தியில் ஏற்பட்ட இத்தவறுக்காக வருந்துகிறோம்.

-ஆசிரியர்

## களுவன்கேணி மீனவர்கள் இருவர் படையினரால் கைது!

(நமது நிருபர்)

களுவன் கேணியைச் சேர்ந்த இரு மீனவர்கள் கடந்த 4ம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

களுவன்கேணியை சேர்ந்த சரவணமுத்து றிஜிதரன், ஜீவா,ஜீவாகரன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவார்.

சம்பவ தினம் கடலில் மீன் பிடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இவர்கள் மட்டக்களப்பு நாசகாரத் தடுப்பு பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.


கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்

நடாத்தும்

கருத்தரங்கு

10.06.2001 ஞாயிறு முற்பகல் 10.00மணி

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை

சரஸ்வதி மண்டபம்

தலைமை

திரு. ஜி. நடேசன்

(உபதலைவர், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்)

அவசரகால, பயங்கரவாத தடைச் சட்டங்களும், பொதுமக்களும்

கருத்துரை வழங்குவோர் :

திரு. நிசாந்தன் சுவர்ணராசா.

(மனித உரிமைகள் செயற்பாட்டாளர்)

கலாநிதி யுவி. தங்கராசா

(பீடாதிபதி, கலைகலாசார பீடம்,கிழக் குபல்கலைக்கழகம்)

நன்றியுரை

பா. அரியநேத்திரன்

(பொருளாளர், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்)

அனைவரும் வருக

நிகழ்ச்சி அனுசரணை : கோறளைப்பற்று மனித உரிமைகள் அமைப்பு


## 'பஞ்சு மெத்தையில் இருந்து விடுதலை பெற முடியாது'

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வளர்ச்சியை அவதானிக்கும் அரசு இராணுவத்தினூடாக எமது இளைஞர்களை அழிக்க இரகசியமாக செயற்பட்டு வருகின்றது.இவ்வாறான செயல்முறை எமது இயக்கத்தின் வளர்ச்சியை தடுப்பதற்கான நடவடிக்கையே ஆகும்.

இவ்வாறு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்தார்.

கோராவெளி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி நிறைவு தினமான செவ்வாய் இரவு ஆலய முன்றலில் நடைபெற்ற கலை நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக குடும்பிமலைக் கோட்ட அரசியல் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது ஆனையிறவுச் சமரில் எமது போராளிகள் சொல்லொண்ணாத்துயரங்களை அனுபவித்து மட்டக்களப்பு மண்ணிற்கு பெருமை தேடித்தந்துள்ளனர்.அதே சமயம் மட்டக்களப்பு போராளிகள் வன்னி மக்களால் போற்றப்படும் அளவிற்கு சாதனை படைத்துள்ளனர்.

ஆனையிறவு முகாமைக் கைப்பற்றுவதற்காக எமது போராளிகள் 18 மாத காலமாக மழை,வெயில் பாராது பதுங்கு குழிகளில் இருந்தனர்.

அவ்வாறு இருக்கும் போது உணவு தட்டுப்பாடு ஏற்பட்டது வெங்குடாந்திப் பாம்பினை உணவாக உட்கொண்டு தமது விடா முயற்சியினை தொடர்ந்தவர்கள் இறுதியாக 75 பேர் ஊடுருவித் தாக்குதல் நடத்தி நாற்பதாயிரம் தொகை கொண்ட இராணுவத்தை ஓட்டம் காட்டியவர்கள்.

தற்போது மட்டக்களப்பில் நான்காயிரம் படையினர் உள்ளனர்.மாலை ஆறு மணிக்கு பின் வெளியில் நடமாட முடியாத நிலை. பிரசவத்தால் வேதனைப்படும் தாய்மார்களை அவசரமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை இவ்வாறு சொந்த மண்ணிலே எமது இனம் அடிமைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

எனவே பஞ்சு மெத்தையில் இருந்து கொண்டு எமது விடுதலையைப் பெற முடியாது. எனவே நாம் ஆட்பலத்தினை பலப்படுத்த வேண்டும்.

இதுவரையில் 40 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் சிங்களப் பேரினவாதிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.எழுபதாயிரம் பொது மக்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளார்கள்.விடுதலைப் போராளிகள் பதினான்காயிரம் பேர் மாவீரர்களாகியுள்ளனர்.

தற்போது எம்மிடம் 64 குழல் பல்குழல் எறிகணை செலுத்தியிருப்பதாக இராணுவம் விளப்பரம் செய்கிறது.இவ்வாறு எமது வளர்ச்சி ஓங்கி நிற்கிறது.

இந்த நிலையில் எமது பலம் பெருக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மேலும் பல விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உரை நிகழ்த்தினர்.கலாசார பண்பாட்டுக் கழகத்தினரின் பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெற்றது.

## நிறுத்தப்பட்ட நிவாரணத்தை வழங்க அகதிகள் கோரிக்கை

(நமதுநிருபர்)

வடமுனை, ஊத்துச்சேனைபகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வாழும் அகதிகள் தங்களுக்கு வழங்கி வந்த அகதி நிவாரணத்தை இடை நிறுத்தாது தொடர்ந்து வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 90ம் ஆண்டு ஊத்துச்சேனை,வடமுனை,பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து மாவடிவேம்பு,சித்தாண்டி கிராமத்தில் அகதிகளாக வசிக்கும் குடும்பங்கள் இது தொடர்பாக விடுத்துள்ள கோரிக்கையில் நாங்கள் ஐந்தாம் மாதம் இடை நிறுத்தப்பட்ட அகதி நிவாரணத்தை தொடர்ந்து வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

இது சம்பந்தமான கோரிக்கை அடங்கிய மனுவொன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பிவைக்குமாறு மட்டக்களப்பு ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் கையளித்துள்ளர்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என மட்டக்களப்பு ஈ.பி.டி.பி.பொறுப்பாளர் பரணீதரன் தெரிவித்தார்.

## வாகரை காட்டில்

டிச்ச ஆறு காட்டுப் பகுதிக்கு ஊடுறுவிச்சென்று நடத்திய தாக்குதலில் 11 விடுதலைப் புலிகளின் கொல்லப்பட்டனர். வன்னியில் அண்மையில் தமிழ் செல்வன் மீது குறிவைத்து நடத்தப் பட்ட தாக்குதலும் இவ்விசேட பயிற்சி பெற்ற படையினராலேயே நடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகின்றது. வாகரைப் பிரதேசத்திலுள்ள இக்கிராமங்களில் தொடர்ந்து இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வருவதால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதுடன் இக்காட்டுப் பகுதியில் தேன் சேகரித்தல் மற்றும் விறகு சேகரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபடுவோர் தமது தொழிலைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இவர்கள் தொழில் நிமிர்த்தம் காடுகளுக்குச் செல்வதையும் முற்றாகத் தவிர்த்து வருவதால் இக்கிராம மக்கள் வருமானத்தை இழந்து பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சவூதி போகச் சென்ற தமிழ் இளைஞர் கைது

(நமது நிருபர்)

சவூதி அரேபியாவிற்கு வேலை வாய்ப்பு பெறுவதற்காக கொழும்பு சென்ற இளைஞர் ஒருவர் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஆரையம்பதி பகுதியைச் சேர்ந்த தியாகராசா திருக்கணேசன் என்னும் மேற்படி இளைஞரே கடந்த மாதம் 31ம் திகதி கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வல்லுறவு சந்தேக நபர்கள் மன்றில் ஆஜராகவில்லை

(மன்னார் நிருபர்)

மன்னாரில் இரு பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட வழக்கு விசாரணை நேற்று மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற போது அதன் சந்தேக நபர்கள் பதினான்கு பேரும் நீதிமன்றில் முன் நிறுத்தப்படவில்லை.

சந்தேக நபர்களை மன்னார் நீதிமன்றில் நிறுத்த வேண்டாம் என கொழும்பு மேல் நீதிமன்றம் விடுத்த உத்தரவையடுத்தே இவர்கள் ஆஜர்படுத்தவில்லை.

இதேவேளை எதிர்வரும் 20ம் திகதி சந்தேக நபர்கள் அனைவரையும் மன்னார் நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிபதி இளம் செழியன் உத்தரவிட்டுள்ளார்

## நோர்வே தூதுவர்

புலிகளிள் மீதான தடை நீக்கத்துக்கு அரசு இணக்கம் தெரிவிக்காததைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டது.

தற்போது இரு தரப்பையும் ஒரு இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரும் புதிய திட்டங்கள் குறித்து ஆராயவுள்ளதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## வவுனியாவில்

இவருடைய இரண்டு கைகளிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் கருப்பையா செல்வராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளது. பொலிசாரினால் சடலம் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிசார் விசார்ணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதேவேளையில் வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் உள்ள சுந்ரபுரம் என்னுமிடத்தில் அடையாளம் காணப்படாத இளைஞர் ஒருவர் செவ்வாய்க் கிழமை இரவு இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கோகுலவாசன் (21) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

## இன்று மட்டு

னை வழியாக கல்லடிப் பாலத்தைத் தாண்டி ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வளாகத்தை சென்றடையும்.

ஊர்திப் பேரணி சென்றடைந்ததும் கல்லடி விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலய சுவாமி நடராஜானந்தா மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

இப்பத்திரிகை வேலை வொய்ஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.